பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 24 திங்கட்கிழமை 08.07.2024 கதிர் 243

# அக்கினியுடன் நேற்று சங்கமித்தது பெருந்தலைவர் சம்பந்தனின் உடல்




இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் பெருந்தலைவரும்,திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஇராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் ஜனாதிபதி ரணில் விக்கிர ☞2

## இது இனி ரகசியம் அல்ல!

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு இப்போது வடக்கு மாகாண சுகாதார சேவையையே பாதிக்குமளவிற்கு வளர்ந்துள்ளது. வடக்கில் உள்ள மருத்து அதிகாரிகள் சங்கத்தினர் அனைவரும் இன்று பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளனர். சாவகச்சேரி மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகருக்கு ஆதரவாக மக்கள் ஒன்றிணைந்து இன்று போராட்டம் அறிவித்திருந்தநிலையில்,நேற்றிரவே அங்கு மக்கள் போராட்டங்கள் இடம்பெறத் தொடங்கிவிட்டதால் அதற்குப் பதிலடியாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையைஅறிவித்திருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது.

சாகவச்சேரி ஆதார வைத்திய சாலையில்கடமையாற்றியமருத்துவ அத்தியட்சகர் மேல் படிப்புக்காக விடுமுறையில் சென்றுவிட்டதால் அவருக்குப் பதிலாக தற்காலிக அத்தியட்சகர் ஒருவர் ☞2

அரச பணியாளர்களுக்கு

## இந்த வருடத்தில் மீண்டும் சம்பள உயர்வு கிடையாது

ஜனாதிபதி திட்டவட்டம்

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் வேளையில் சிலர் சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். அரச சேவையாளர்களுக்கு இவ்வருடத்தில் மீண்டும் சம்பள அதிகரிப்பு வழங்க முடியாது. ஆனால் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டதில் அதற்கான நிதியை ஒதுக்க முடியுமென எதிர்பார்க்கின்றோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

'சட்டத்தை மதிக்கும் நாடு' எனும் தொனிப்பொருளில் வெல்லவாய பொது விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஊவா மாகாண சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களின் வலுவூட்டல் செயலமர்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

90களில் விடுமுறையில் சுவிட்சர்லாந்துக்கு சென்றிருந்தேன். நான் என் தந்தையின் நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன். நான் அந்த ☞2

## சம்பந்தனின் இலக்குளை அடைய அனைவரும் உறுதிபூணவேண்டும்

இந்தியத் தூதுவர் அழைப்பு

சம்பந்தனின் இலக்குகளை அடைவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து உறுதிபூண்டு செயற்பட வேண்டும்என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலிநிகழ்வில்அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்அங்குமேலும் தெரிவித்ததாவது:

தமிழ்மக்களினதும் நாட்டினனும் முக்கியமான தலைவராக இருக்கும் ☞2

## தமிழரின் சுயநிர்ணய உரிமையை உறுதியாகச் சொன்னவர் சம்பந்தன்

மாவை சேனாதிராசா இரங்கலுரை

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை உறுதியாகச் சொன்னவர் சம்பந்தன் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்றுநடைபெற்றமறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

சம்பந்தனின் மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாதவொரு விடயமாகும். அவரும் நாங்களும் தமிழ் மக்களின் விடுதலைக்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

குறிப்பாக, நாம் மட்டக்களப்பில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டபோது எம்மை மீட்பதற்காக அவர் பல்வேறுமுயற்சிகளை ☞9

## சம்பந்தனின் நோக்கம் நிறைவேற மோடி முழு ஒத்துழைப்புத் தருவார்

இறுதி நிகழ்வில் அண்ணாமலை உரை

சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காகவாழ்ந்து மறைந்திருக்கிறார். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும்முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என்று பாரதியஜனதாகட்சியின் தமிழகத் தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த தலைவர் இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில்இரங்கலுரைஆற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞10

## பிரபாகரன் வழியில் சம்பந்தன் என்று சிங்களத் தலைவர்கள் பொய்யுரைப்பு

மனோ கணேசன் சுட்டிக்காட்டு

பிரபாகரன்ஆயுதத்தினால் பெறமுடியாத விடயத்தினை சம்பந்தன் பேச்சு ஊடாகப் பெறப் பார்க்கின்றார் என்று சிங்களத் தலைவர்கள் தவறாக பிரசாரம் செய்தார்கள். பொய்யுரைத்தார் ☞8

## சம்பந்தன் மீதான முஸ்லிம்களின் வாஞ்சை அளவிடவேமுடியாதது

ஹக்கீம் நேற்று அஞ்சலியுரை

முஸ்லிம்கள் அண்ணன் சம்பந்தன் மீது கொண்டிருக்கின்ற வாஞ்சை அளவிட முடியாதது. முஸ்லிம்களையும் அரவணைத்த ஒரு தீர்வு வடக்கு, கிழக்கில் வரவேண்டும் என்பதில் அவர் உறுதியாக ☞10

## புதிய அரசமைப்பூடான தீர்வு என்பதில் சம்பந்தனுக்கு நம்பிக்கை இருந்தது

ஐ.ம.சக்தியின் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாகத்தீர்வு காணப்படவேண்டும் என்பதில் சம்பந்தன் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழுஉறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சம்பந்தனின் மறைவுக்கு தேசிய மக்கள் சக்திதனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின் றது. நாம் ஐந்துதசாப்தங்கள்கடந்து அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த பெருந்தலைவரின்இறுதிநிகழ்வில் இணைந்திருக்கின்றோம்.

சம்பந்தன் சொற்களைவெற்றுப்பொருளாக ஒருபோதும் பயன்படுத்த மாட்டார். அவர் அர்த்தமான, முக்கியமான பொருள் பொதிந்த வகையில்தான் கருத்துக்களை வெளிப்படுத்துவார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவர் வகித்த காலத்தில் சவால்களைக் கொண்டு வெற்றிக்கொண்டார். குறிப்பாக அதிகார வர்க்கத்தினர் தம்வசம் அதிகாரங்களை குவிப்பதற்கு முயற்சித்த காலத்தில் அவர் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து சவால்களை சமாளித்து வெற்றிகொண்டார்.

அதேநேரம், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட வேண்டுமாயின்புதியஅரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாகஇருந்ததோடு 2015இல்அதற்காகஅவர் அர்ப்பணிப்புடன் ☞8

## பொலிஸ் அதிகாரமற்ற 13 ரணில் விடாப்பிடி நிலை

சம்பந்தனின் இறுதிக் கிரியையிலும் அதையே தெரிவிப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரம் இல்லாமல் நடைமுறைப்படுத்துவதுகுறித்துக் கலந்துரையாடப்படுகின்றதுஎன்றுஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பொலிஸ் அதிகாரத்திற்குப்பதிலாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது ☞9

## போதை மற்றும் பாதாளக் கும்பல்கள் டிசெம்பர் 31க்கு முன்னர் ஒழிக்கப்படும்

அமைச்சர் டிரான் அலஸ் அறிவிப்பு

போதைப் பொருள் கும்பல்களும் பாதாள உலகக் குழுக்களும் டிசெம்பர் 31க்குள் இல்லாது ஒழிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரன் ☞10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நியமிக்கப்பட்டார். கடமைகளைப் பொறுப்பேற்றதும் அவர் நிர்வாக ரீதியாக இறுக்கமான போக்கைக் கைக்கொள்ளத் தொடங்கியதன் விளைவாகவே இந்த முரண்பாடு தோற்றம்பெற்றுள்ளது.

புதிய பதில் அத்தியட்சகர், வைத்தியசாலையை நேர் சீர்ப்படுத்தி அதன் சேவைகளை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றார் என்று சாவகச்சேரி மக்கள் நம்புக்கின்றார்கள். ஆனால், நிர்வாக ரீதியில்போதியமுன்னறிவித்தல்கள், கால அவகாசங்கள் இன்றி தடாலடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று மருத்துவர்கள்தரப்பில்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக இடமாற்றங்கள் தொடர்பில் புதிய பதில் அத்தியட்சகர் எடுத்திருக்கக்கூடியநடவடிக்கையில் மனிதாபிமான அணுகுமுறைகள் இருக்கவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நிலமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு மாகாண சுகாதாரத்துறைஉடனடிநடவடிக்கை எடுக்காததன் காரணமாக, பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியுள்ளது. பதில் அத்தியட்சகரை வெளியேற்றுவதில் மருத்துவர்கள் குறியாக இருக்கின்றனர். ஆனால் அவரை வெளியேற விடக்கூடாது என்பதில் மக்கள் தீவிரமாக இருக்கின்றனர். பதில் அத்தியட்சகரால் தமது பிரதேசத்திற்கு நல்லது நடக்கும் என்று மக்கள் நம்புகின்றனர்.

இதற்கிடையில் பதில் அத்தியட்சகரை நேற்றிரவு பொலிஸார் தம்முடன் அழைத்துச் செல்ல முயன்றதை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது. வைத்தியாசலைக்கு முன்பாகப் பெரும் எண்ணிக்கையில் கூடிய மக்கள், அங்கு போராட்டத்திலும் குதித்தனர். இன்றுஅந்தப்போராட்டம் விரிவாக்கம் காணும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குப் பதிலடியாகவே மருத்துவர்களும் பணிப்புறக்கணிப்புப்போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத இந்தப் பிரச்சினையை விரைவில் முடிவுக்குக் கொண்-டுவருவதற்கு அனைத்துத் தரப்பினரும் முயற்சிப்பதே சிறந்தது. யார் சரி யார் பிழை என்பதற்கு அப்பால் வடக்குசுகாதாரத்துறைவழமைக்குத் திரும்பவேண்டும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அக்கினியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)











மசிங்க, பா.ஜ.க.தலைவர் அண்ணாமலை உட்பட ஆயிரக்கணக்கானவர்களின் பங்கேற்புடன் உணர்வெழுச்சியுடன் இறுதிமரியாதை அளிக்கப்பட்டு அக்கினியுடன் சங்கமித்தது.

தனது 91 வயதில் கடந்த ஞாயிற்றுக்கிழமைஇயற்கைஎய்திய இராஜவரோதயம் சம்பந்தனின் இறுதிக் கிரியைகள், இலக்கம் 115, அஞ்சல் நிலைய வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நேற்றுக் காலை 10 மணிக்குத் தொடங்கி பிற்பகல் ஒரு மணியளவில் நிறைவு பெற்றன.

அதனைத் தொடர்ந்து இலங்கையின் இராஜதந்திரிகள், சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் பிற்பகல் இரண்டு மணிக்குவிசேடமாகஅமைக்கப்பட்ட மேடையில் அஞ்சலி உரைகள் ஆரம்பமாகின. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதியாக லக்ஷ்மன் கிரியெல்ல, பாரதீய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை, இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ்ஜா, முஸ்லிம்காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ, தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் உரையாற்றினர். மாலை 3.30 மணிக்குஅஞ்சலிஉரைகள்நிறைவு செய்யப்பட்டு, இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

அஞ்சல் நிலைய வீதி, மின்சார நிலைய வீதி ஊடாக கிறீன் வீதிச் சந்தியை அடைந்து, அங்கிருந்து கல்லூரி வீதிக்கு சென்று, மீண்டும் சோனகர் தெரு ஊடாக இராஜவரோதயம் வீதியை அடைந்து, பின்னர் பிரதான வீதிக்குச் சென்று, அங்கிருந்து கடற்காட்சி வீதி ஊடாக ஏகாம்பரம் வீதிக்கு சென்று இறுதியாக திருகோணமலை இந்து மயானத்தை அடைந்தது அவரது பூதவுடல் தாங்கிய பேழை.

அன்னாரின் இறுதி ஊர்வலம் செல்லும் வழியில் உள்ள ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் என்பனவற்றில் பூதவுடலுக்கு விசேட அஞ்சலியை செலுத்தப்பட்டது. இறுதி ஊர்வலம் சென்ற வீதிகளில் உள்ள மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சம்பந்தனின் மூத்த மகன் சஞ்ஜீவன் சிதைக்குத் தீ மூட்ட இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது.

# ஜனாதிபதித் தேர்தல் திகதி மாத இறுதிக்குள் அறிவிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ள திகதியை இந்த மாதஇறுதிக்குள்அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ஏ.எல்.எம்.ரத்நாயக்க இது தொடர்பில் தெரிவித்த தாவது:

ஜூலை 17ஆம் திகதிக்குப்பின்னர் தேர்தல்களுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் எமக்கு கிடைக்கும். அந்த வகையில் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழு முன்னாயத்தப் பணிகளை முன்னெடுத்துள்ளது.

வாக்காளர்கள் பட்டியலை சான்றுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2024ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கு அமைவாகவே தேர்தல் நடத்தப்படவுள்ளது என்றார்.

# 200 தொழிற்சங்கங்கள் இருநாள்கள் போராட்டம்

## இன்றும் நாளையும் சுகவீன விடுமுறை அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள 200ற்கும் மேற்பட்ட அரச சேவை தொழிற்சங்கங்கள் இன்று மற்றும் நாளை சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

அதேநேரம், நாளைய தினத்தை நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஆசிரிய அதிபர் சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அத்துடன், இன்று நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

## உயர் தரம் சித்தியடைந்த

# மாணவர்கள் கல்வியை தொடர வட்டியில்லாக் கல்விக் கடனுதவி

2022ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்கு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் கற்கைநெறிகளை தொடர்வதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு வாய்ப்புக் கிடைக்காத உயர் தரம் சித்தியடைந்த மாணவர்களுக்காக இந்த வட்டியில்லாக் கடன் திட்டம், 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் முன்மொழிவுகளின்படி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதிகபட்சமாக 8 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 17 அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் 100 பட்டப்படிப்புகளை கற்பதற்கு 7 மாணவர் குழுக்களின் கீழ் உள்ள 17,313 மாணவர்களுக்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## சம்பந்தனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தனின் மறைவால் நாம் கவலைஅடைகின்றோம். தனிப்பட்ட முறையில்அவருடையமறைவானது எனக்கு ஆழ்ந்த கவலைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. அவரை எனக்கு 17 ஆண்டுகளாக நன்கு தெரியும்.

இந்தியாவில் இருந்து சிரேஷ்ட அதிகாரிகள், அமைச்சர்கள் இலங்கைக்கு வருகை தரும்போது சம்பந்தனை சந்திக்காது அவர்கள் செல்வது கிடையாது. அந்தளவுக்கு அவருடைய முக்கியத்துவம் காணப்படுகிறது.

நாங்கள் எப்போதும் அவருடைய கரிசனைகள் மற்றும் ஆலோசனைகளை செவிமடுத்தே வருகின்றோம். அவர் அரசியல் தீர்வு விடயத்தில் எவ்வளவு தூரம் இறுக்கமாக இருந்தாரோ அதேபோன்று தான் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களிலும் தீவிரமான ஆர்வத்தினைக் காண்பித்தார்.

அவர் வடக்கு, கிழக்குக்கு உட்பட்ட தலைவராக அல்லாது முழு இலங்கைக்கும் அவரது அறிவுரைகளை வழங்கியவராக இருந்தார். அத்துடன் அவருடைய வெற்றிடத்தினை நிரப்புவது மிகவும் கடினமாகும்.

எனினும்அவரதுஇட்சியங்களை அடைவதற்காக நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று இன்றைய தினத்தில் உறுதி எடுப்பதோடு அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிற்குச் சென்றபோது, இன்று மாலை உங்களைப் பார்க்க பொலிஸ்காரர் ஒருவர் வருவார் என்று சொன்னார். ஏன் என்று கேட்டேன். இல்லை, வெளிநாடுகளில் இருந்து நமது கிராமத்திற்கோ, நகரத்திற்கோ யாராவது வந்தால், பொலிஸாருக்கு அறிவிக்கும் வழக்கம் இங்கு உள்ளது என்றார்.

இந்த திட்டம் அந்த நாடுகளில் தினமும் செயல்பாட்டில் உள்ளது. வெளிநாடுகளில் இருந்து யாராவது வந்தால், அவர்களைக் கண்காணிக்கின்றனர். இதனால் அந்த பகுதிகளுக்குள் தீவிரவாதிகள் நுழைவது கடினமாகும். போதைப்பொருள் கொண்டு வருவதும் கடினம். இன்று அந்த சமூகக் காவல் முறையை ஆரம்பித்துள்ளோம். இங்கிலாந்திலும் இந்த முறை நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் யார் இருக்கிறார்கள் என்பது காவற்துறைக்குத் தெரியும். இந்தத்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் புனரமைப்பு

(தில்சாத் பர்வீஸ்)

எதிர்காலம் இளைஞர்களின் கரங்களில் எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் விளினயடி - 01 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் நியமனம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் நடைபெற்றது. இதன் போது விளினயடி - 01 இற்கான இளைஞர் அமைப்பாளராக சகோதர் ஹுஸைன் (ஊடகவியலாளர், தகவல் தொழில் நுட்ப உத்தியோகத்தர்) அவர்களுக்கு நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான சட்டத்தரணி எம்.எம். ஸெளபீர், சம்மாந்துறை மத்திய குழுவின் செயலாளர் அஸறுடீன், சம்மாந்துறை இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளரும் தைக்காப் பள்ளி வட்டார வேட்பாளருமான அர்ஷத் இஸ்மாயில், சம்மாந்துறை மத்திய குழு உறுப்பினர்களான முபாறக், சபீக் உட்பட விளினயடி 01 இற்கான இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (05)



## நிதர்சனதத்தின் நிழல் கவிதை நூல் வெளியீடு

(தில்சாத் பர்வீஸ்)

இலைமறைகாயாய் ஒளிந்திருப்பவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து அவர்களது எழுத்தாக்கத்திற்கு உயிரூட்டும் வகையில் செயற்பட்டுவரும் ஏட்டுலா கனவாக்கத்தால் வெளியிடப்பட்ட அக்கரைப்பற்று முபீதா அமீன் எழுதிய அவரது கன்னிப்படைப்பான 'நிதர்சனத்தின் நிழல்' கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை, அக்கரைப்பற்று கலை இலக்கிய பேரவையின் தலைவர் கலாபூசனம் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் கவிஞரும், இலக்கிய செயற்பாட்டாளருமான எம்ஜஎம். நாளீரின் தொகுப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் கலந்து சிறப்பித்ததுடன், ஓய்வுநிலை நில அளவையாளர் ஏ.எல்.முஹிதீன் பாவா, அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி என்.நவப்பிரியா ஆகியோரும், மேலும் விஷேட அதிதிகளாக அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சன்றைஸ் ஜெய்னுடீன், மு.ச கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.இம்றாலெப்பை ,ஏட்டுலா கனவாக்க குழு சார்பாக அதன் பணிப்பாளர் ஆஷிக் ஹுசைன், ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவரும் வானொலி அறிவிப்பாளருமான ஏ எம். இன்ஷாப், மூதூர் ஜே.எம்.ஐ நிறுவன பணிப்பாளர் முஹம்மட் இஹ்ஷான் ,இளம் எழுத்தாளரும் பல்கலைக்கழக மாணவியுமான ஹஸ்மியா தாஹா மற்றும் பல இலக்கிய கர்த்தாக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், முதல் நூற்பிரதியை றஸ்பாஸ் பணிப்பாளர் ஏ.கே. றிப்னாஸ்/ம், இரண்டாம் பிரதியை

நூலாசிரியரின் தாயார் எம்.எம்.சித்தி றிபாயாவும் பெற்றுக் கொண்டார். மேலும் வருகைதந்தோருக்கு புத்தகப் பிரதிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வின் ஊடக பங்காளராக ஆர்.ஜே மீடியா மற்றும் வாசம் தொலைக்காட்சி இணைந்து கொண்டன. (05)

## சமுர்த்தி குடும்பங்களுக்கு இலவச ஆங்கில டிப்ளோமா








அனைவருக்கும் கல்வி எனும் தொனிப்பொருளில் சமுர்த்தி திணைக்களத்துடன் இணைந்து தேசிய சமூக வளர்ச்சி நிறுவனம் கிராம மட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு சர்வதேச மொழி கற்றுக்கொள்ள வேண்டும் என நோக்கில் இவ்வாறான திட்டம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் ஆங்கில டிப்ளோமா பாடநெறி ஆரம்பமானது.

சமுர்த்தி குடும்பங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்களுக்கு 150 மணி நேரம் ஆங்கில டிப்ளோமா பயிற்சி வழங்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சி வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்கள்,குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகார அமைச்சின் கீழ் தேசிய சமூக வளர்ச்சி நிறுவனத்தால் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் ஒழுங்கு படுத்தலில் தேசிய சமூக வளர்ச்சி நிறுவனத்தால் ஆங்கில டிப்ளோமா பயிற்சி நெறி தொடக்க நிகழ்வு கிளிநொச்சியில் உள்ள தேசிய சமூக வளர்ச்சி நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவேல் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரவீந்திர விதானாராச்சி கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திருமதி இன்பராஜா உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (05-113)

## மூதூர் பிரதேச செயலர் வெளிநாடு பயணம்

(எஸ்.எல்.நௌபர்)

மூதூர் பிரதேச செயலாளர் முபாறக் அரசாங்கத்தின் வெளிநாட்டுப் புலமைப்பரிசு திட்டத்தின் கீழ் 2024.07.10 ஆம் திகதி முதல் இருவார கால வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு சீனா நாட்டிற்குச்செல்கின்றார்.

வாழைச்சேனை பிரதேசத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான இவர் வெருகல் குச்சவெளி மூதூர் , தெகியத்தை கண்டிய ஆகிய பிரதேச செயலகங்களில் உதவிப்பிரதேச செயலாளராகப் பணியாற்றியுள்ளதோடு

நீண்டகாலமாக மூதூர் பிரதேச செயலாளராகவும் பணியாற்றிவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## சமாதான நீதிவானாக நியமனம்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரியும், நீதிக்கான மையம் அமைப்பின் ஸ்தாபக பிரதித் தலைவருமான கலாசார உத்தியோகத்தர் சாய்ந்தமருதைச் சேர்ந்த உதுமாலெப்பை முஹம்மட் றிம்ஸான் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சாய்ந்தமருது பிரதேசத்தில் நன்கறியப்பட்ட கலைஞரான இவர் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிலையத்தில் நுண்கலைகள் பட்டம் பெற்ற பட்டதாரியுமாவார்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் அமைப்பு மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிலைய பழைய மாணவர்கள் அமைப்பு போன்றவற்றின் நிர்வாக உறுப்பினராகவும், பிரபல சமூக சேவையாளராகவும் திகழ்கிறார். கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் அமைப்பு மீளெழுச்சி பெற உருவாக்கப்பட்ட குழு உறுப்பினராக இருந்து செயற்பட்டவர் என்பதுடன், சாய்ந்தமருது பிரதேச கலைஞர்கள் தேசிய ரீதியாக சாதிக்க பல்வேறு வகைகளிலும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரும் ஒருவராவார். (05)



## பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச்சங்கம் ஊடக சந்திப்பு

*பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச்சங்கம் கிளிநொச்சியில் ஊடக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.*

*மேற்படி சங்கத்தின் மத்திய மற்றும் மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவைச்சங்கத்தின் தலைவர் அ.றெஜிஅலோசியஸ் கருத்து தெரிவித்தார்.*

*எதிர்வரும் 8,9 ஆம் திகதிகளில் சம்பள உயர்வு மற்றும் சேவைப்பிரமாண குறிப்பில் இருக்கின்ற சில பாதகமான விடயங்களில் திருத்தங்களை கொண்டு வருமாறும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறித்த ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தனர்.*

*எதிர்வரும் 8 மற்றும் 09 ஆம் திகதி திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மேற்கொள்கின்ற போராட்டத்திற்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறும் கொழும்பில் இடம்பெறுகின்ற போராட்டத்தில் பங்கெடுக்குமாறும் அழைப்பு விடுத்தனர்.*

*(05-113)*

## மாவடி கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா

(வி.ரி.சகாதேவராஜா)

*காரைதீவு மாவடி ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடி வேல் விழா மகோற்சவத்தின் கொடி ஏற்றத்திருவிழா சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.*

*முன்னதாக கொடியேற்ற உற்சபத்திற்கான கொடிச்சீலை கணேச லோகநாத குருக்கள் தலைமையில் பாரம்பரிய ரீதியாக பாலையடி வாலவிக்னேஸ்வர ஆலயத்தில் இருந்து எடுத்துவரப்பட்டது.*

*கொடி ஏற்ற உற்சவம் 10.30 மணிக்கு இடம்பெற்றது. (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் மீண்டும் தோற்கும் ரணில்

வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களும் அமைந்தன. தமிழ் மக்களின் தலைமகனான பெருந் தலைவர் சம்பந்தனின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் பேசும் போது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை காவல்துறை அதிகாரங்கள் இன்றி நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசுவோம் என்றார்.

”13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் காவல்துறை அதிகாரம் இல்லாமல் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இப்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றிப் பின்னர் கலந்துரையாடலாம்.

புதிய பரிந்துரையாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் கட்டமைப்பிற்குள் அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு ஆளும் தரப்பு முன்மொழிந்துள்ளது. மேலும், நவாஸ் ஆணைக்குழு அறிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது” என்றார் ரணில்.

அவர் கூறும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று ஒன்றரை வருடங்களுக்கு மேலாகிவிட்டது. 2023 மாசி 4ஆம் நாளுக்கு முன்பாகத் தீர்வை முன்வைப்பேன் என்று அறிவித்து அவர் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் அதன் பின்னர் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் நடந்த பேச்சுக்களில் இந்த விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டது. ஆனால், எந்த உருப்படியான –முடிவும் எடுக்கப்படவில்லை. கடைசியில் அந்தக் கூட்டங்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

அவற்றையே இப்போது ”கலந்துரையாடப்பட்டு வருகின்றன” என்றுஏதோமிகஅண்மையிலும்அதுபற்றிக்கலந்துரையாடப்பட்டது போன்று அரசுத் தலைவரின் உரை அமைந்துள்ளது. மிக அண்மையில்தீர்வுதொடர்பில்அரசுத்தலைவருடன்நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் மட்டுமே உரையாடியிருந்தனர். சம்பந்தனின் மறைவைத் தொடர்ந்து இந்த உரையாடல் இடம்பெற்றிருந்தது. அந்தச் சந்திப்பின்போதும் அரசமைப்பில் உள்ள 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதுன் மூலம் தீர்–வு நோக்கிய முதல் அடியை எடுத்து வைக்கலாம் என்றே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்குச் சாதகமான வகையில் தலையாட்டிய ரணில், இப்போது காவல்துறை அதிகாரங்கள் அற்ற 13 பற்றிப் பேசலாம் என்கிறார்.

தமிழ் மக்களால் எப்போதோ நிராகரிக்கப்பட்ட ஒரு அதிகாரப் பகிர்வு முறையே 13. இருப்பினும் அரசியல் தீர்வு ஒன்றைக் காணும்சிங்களத்தலைமைகளின்விருப்புக்கானஅறிகுறியாக, நல்லெண்ண சமிக்ஞையாகவே – அரசமைப்பில் ஏற்கனவே இருக்கும் – அதனை நடைமுறைப்படுத்துமாறு தமிழ் மக்கள் சார்பில்கோரப்படுகின்றது. அதைக்கூட முழுமையாக நிறைவேற்ற முடியாத அல்லது அதற்கு விரும்பாத சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றைத் தருவார்கள் என்பது நம்பிக்கைக்குரியதல்ல.

தனது சம்பந்தனதும் காலத்திற்களுு இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க சொல்லி வந்தார். அதற்கான வாய்ப்புக்கள் பல தடவைகள் கிட்டியபோதும் அவற்றையெல்லாம் தவறவிட்டார். இப்போது சம்பந்தன் மறைந்துவிட்டார். அதையொட்டியாவது – சம்பந்தனது ஆத்மா சாந்தியடையவாவது – தீர்வு விடயத்தில் சிறு முன்னேற்றத்தையாவது காட்ட ரணில் விக்கிரமசிங்க முன்வராதது மிகப் பிற்போக்குவாத அரசியலின் வெளிப்பாடு.

பிரதான எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் தாம் ஆட்சிக்கு வந்தால் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்துள்ளன. இந்த இரு தரப்பும்தான் அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ரணிலுக்கு எதிராளிகளாக நிற்கக்கூடிய வெற்றி வாய்ப்பைக் கொண்டிருக்கக்கூடியஎதிராளிகள். எனவே13ஐநடைமுறைப்படுத்த இது ரணிலுக்கு ஒரு மிகச் சிறந்த காலப் பகுதி. அப்படியிருந்தும் அதற்கு ரணில் தயாராக இல்லை. இந்த நிலையில் அவர் ஒரு தீர்வை முன்வைப்பார் என்று கருதி தமிழர்கள் தமது அரசியலை முன்னெடுப்பது விழலுக்கு இறைந்த நீராகத்தான் முடியும்.

சம்பந்தன்உயிரோடுஇருந்தகாலத்தில்ஒருதீர்வைமுன்வைக்க முடியாமல் போனதன் காரணத்தால் ரணில் விக்கிரமசிங்க தோற்றுப்போன ஒரு தலைவராகிப் போனார் என்று ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். இப்போது சம்பந்தனின் மறைவுக்குப் பின்னரும் 13 (மைனஸ்)தான் தீர்வு என்று கூறி மீண்டும் தோற்றிருக்கிறார் ரணில்.

# இங்கிலாந்து புதிய பிரதமர் ஈழத் தமிழர் ஆதரவானவரா?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



பிரித்தானியத் தேர்தல் தமிழ் பெண்ணின் வெற்றியானது, ஈழத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெரும் பலமாக அமைய சாத்தியங்கள் என பல சிங்கள ஊடகங்கள் அச்சத்தை அள்ளித் தெரிவிக்கின்றன.

அதேவேளை உலக அரசியலில் அதிகரிக்கும் தமிழர்களின் செல்வாக்கால், பூகோள அரசியல் நகர்வுகளுக்கு ஏற்ப தமிழர்கள் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து ஓரணியில் கைகோர்த்து செயல்பட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்ப்பார்ப்பாகவும் உள்ளது.

### தொழிற்கட்சியின் ஆதரவு நிலை?

இலங்கையில் சுயநிர்ணயம், அமைதி மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் செய்த தியாகங்களை நினைவுகூர வேண்டியது அவசியம் என தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர; (Keir Starmer) கடந்த மே மாதம் தெரிவித்திருந்தார். பிரிட்டிஷ் தமிழர் பேரவை (BTF) ஏற்பாடு செய்திருந்த ட்ரஃபல்கர் சதுக்கத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்வில் அப்போதய தொழிற்கட்சி தலைவரும், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் (Keir Starmer) இவ்வாறு தெரிவித்திருந்தார்.



தமிழர் தாயகத்தில் உயிரிழந்த, பாதிக்கப்பட்ட,, உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் தொழிற் கட்சி உறுதிப்படுத்துகிறது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை இலங்கை ஆளும் தரப்பு பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒரு சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்கவேண்டியதும் அவசியம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

2022 ஆம் ஆண்டில், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் தமிழர்களுடன் ஆதரவாக நிற்கவும், அட்டூழியங்களைச் செய்த குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐ.நா உயர் ஆணையரின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று இங்கிலாந்து அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

அனைத்து பெரும் அட்டூழியக் குற்றங்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்களின் குற்றவாளிகள் பொறுப்புக்கூறப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்” என்றும் அவர் பிரிட்டிஷ் ஆளும் தரப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். உண்மையான அமைதி மற்றும் நீதிக்கான தமிழ் மக்களுக்காக தொழிற் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் 2022 இல் கூறியிருந்தார்.

### தொழிற் கட்சி பெரும்பான்மை:

நடந்து முடிந்த பிரிட்டன் பொதுத் தேர்தலில் ஆட்சியமைத்து 412 இடங்களை தொழிலாளர் கட்சி கைப்பற்றிள்ளது. பிரித்தானிய முன்னாள் பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேடிவ் கட்சி 121 இடங்களிலும், லிபரல் டெமாக்ரடிக் கட்சி 71 இடங்களிலும் வெற்றிப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளதாகவும் தொழில் கட்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவுமே பல கருத்துக் கணிப்புகள் முன்பு வெளியாகின. அதற்கேற்ப இந்த தேர்தலில் தொழில் கட்சி வெற்றிபெற்று 14 ஆண்டுகளின் பின்னர் பிரித்தானியாவில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி செய்திவந்து. பலமுறை கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு மற்றும் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் விலகியமை உள்ளிட்ட காரணங்களால் பிரதமர்களும் மாறினர். பிரதமராக இருந்த ரிஷி சுனக் மீது மக்கள் பெரும் எதிர்பார்ப்பை ஆரம்பத்தில் வைத்திருந்த போதிலும் பின்னர், அவரது செல்வாக்கு கடுமையாக சரிந்தது என கருத்துக் கணிப்புக்கள் முன்னரே தெரிவித்தன.

### தமிழ் பெண் எம்.பியாக வெற்றி:

நடந்து முடிந்த தேர்தலில் 8 தமிழர்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டு இருந்தனர். உமா குமரன், கவின் ஹரன், மயூரன் செந்தில் நாதன், கமலா குகன், டெவினா பால், நரணி ருத்ரா ராஜன், கிரிஷ்ணி, ஜாஹிர் உசேன் ஆகியோர் பிரித்தானிய நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட்டியிட்டிருந்தனர். இவர்களுள் தொழிலாளர் கட்சியின் சார்பாக உமா குமாரன் (Uma Kumaran) போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். வரலாற்றில் முதல் முறையாக பிரித்தானியாவில் தமிழர்கள் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதால் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்தத் தேர்தலை உற்று நோக்கி வந்தனர்.

இந்நிலையில், 19,145 வாக்குகளை பெற்று உமா குமரன் பெரும் வெற்றியடைந்துள்ளார். இந்த வெற்றியின் மூலம் பிரித்தானிய வரலாற்றில் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வரலாற்று சாதனையை உமா குமரன் படைத்துள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்களையும் விட பல மடங்கு அதிக வாக்குகளைப் பெற்று உமா குமரன் வெற்றி பெற்றுள்ளமை இவ்வரலாற்று சாதனையை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உலக அரசியலில் தமிழர் ஆளுமை:

பிரித்தானிய தேர்தலில் ஈழத் தமிழர் ஒருவர் வெற்றிபெற்றுள்ளமையால், அது இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் நகர்வுகளுக்கு வலுவாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்பாரக்கின்றனர்.

அத்துடன் தொழில் கட்சி தமது தேர்தல் அறிக்கையில் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் முக்கிய அவதானம் செலுத்தியுள்ளது.

உலக அரங்கில் கனடாவின் அரசியலில் தமிழர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் சந்தர்ப்பங்களும் உருவாகியுள்ளது. கடந்தமுறை ஹரி ஆனந்த சங்கரி நாடாளுமன்றத்துக்கு தெரிவானதுடன், அமைச்சுப் பொறுப்புக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் தமிழ் மக்கள் ஓரளவு அரசியல் செல்வாக்கு உள்ளவர்களாக உள்ளனர். இம்முறை அமெரிக்க தேர்தலிலும் சில தமிழர்கள் போட்டியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே, உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் அரசியல் செல்வாக்கு அதிகரித்து வருவதால் இவர்கள் அனைவரும் ஒரு பொது இணக்கப்பாட்டுடன் செயல்படும் தேவை எழுந்துள்ளது. உலக அரசியலில் அதிகரிக்கும் தமிழர்களின் செல்வாக்கால், பூகோள அரசியல் நகர்வுகளுக்கு ஏற்ப தமிழர்கள் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை மறந்து ஓரணியில் கைகோர்த்து செயல்பட வேண்டும் என்பதே அனைவரது எதிர்ப்பார்ப்பாகவும் உள்ளது.

தற்போதய பிரித்தானியத் தேர்தல் வெற்றி, ஈழத் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் பெரும் பலமாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்துவாழும் தமிழ் மக்களும் மேற்கத்திய அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் நபர்களாக உள்ளனர்.

இவர்களும் ஈழத் தமிழர்களும் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களுக்கான பொது அரசியல் கோட்பாடுகளை வகுத்து செயல்படுவதன் மூலம் சர்வதேச ரீதியில் தமிழர் உரிமைக்கான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்.

# வரலாறு காணமுடியாத பாதயாத்திரீகர்கள் இம்முறை கதிர்காமத்துக்காக கானகத்தில்







( கதிர்காமத்தில் இருந்து வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடி வேல்விழாவை ஒட்டிய பாதயாத்திரை வரலாறு காணாத வகையில் இம்முறை களைகட்டி உள்ளது. இதுவரை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாதயாத்திரீகர்கள் கானகத்தினுள் பிரவேசித்து இருக்கின்றார்கள். கடந்த 30ஆம் திகதி முதல் நாள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கானகப் பாதை திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தினம் சுமார் 7000 அடியார்கள் கானகத்தில் பிரவேசித்தனர். கடந்த ஆறு நாள்களாக பயணித்து வெள்ளிக்கிழமை கதிர்காமத்தை சுமார் 5000 அடியார்கள் வந்தடைந்தனர்.

சனிக்கிழமை உகந்தமலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை ஒட்டிய கொடியேற்றம் ஆலய பிரதம குரு க.கு. சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சுமார் 6000 அடியார்கள் கானகத்தில் பிரவேசித்துள்ளார்கள்.

அதேவேளை சனிக்கிழமை கதிர்காம கந்த ஆலய கொடியேற்றம் பால்குடி பாபா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

அவ்வமயம் வடக்கு கிழக்கிலிருந்து சுமார் 10000 அடியார்கள் கொடியேற்றத்தில் கலந்து கொண்டார்கள். எதிர்வரும் 11ஆம் திகதிவரை காட்டுப்பாதை திறந்திருக்கும்.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் கடந்த 60 நாள்களின் பின்னர் வெள்ளிக்கிழமை கதிர்காமத்தை அடைந்து கதிர் மலை ஏறி அவர்களை அவர்களது நேர்த்தியை பூர்த்தி செய்து இருந்தார்கள்.

சனிக்கிழமையும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான யாத்திரீகர்கள் தற்சமயம் கானகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள் . இம்முறை பயணம் அனைவருக்கும் சாதகமாக அமைந்திருந்தது காலநிலை சிறப்பாக இருந்தது.

எனினும் இரண்டு இடங்களிலே பொலீஸ் மற்றும் ராணுவத்தினரின் கணக்கெடுப்பு இடம்பெற்று இருந்தது. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அரோகராக் கோஷம் விண்ணைப் பிளக்க கதிர்காமம் முருகன் ஆலய ஆடிவேல் விழா

(கதிர்காமத்திலிருந்து காரை-தீவு வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவ கொடியேற்றம் சனிக்கிழமை மாலை பஸ்நாயக நிலமே திஷான் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கிரிவெஹர விஹாராதிபதி கோபவக தம்மிந்த நாயக்க, கதிர்காமம் ஸ்ரீஅபிநவரம்திபதி சாஸ்த்ரபதி கபுகம சரணதிஸ்ஸ நஹிமி, பஸ்நாயக்க நிலமே திஷான்,பரிவார ஆலய குரு சிவஸ்ரீ தங்கவேல் குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் இந்த நிகழ்வில் சமய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

சரியாக மாலை 5.28 மணிக்கு அங்குள்ள பள்ளிவாசலில் அரோகரா கோஷம் விண்ணைப்பிளக்க கொடியேற்றம் நடைபெற்றது.

நிகழ்வில் இனமதபேதம் இன்றி பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக 16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி மாணிக்க கங்கையில் தீர்த்த உற்சவம் இடம்பெறும். உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

# வலயமட்ட காற்பந்தாட்ட போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்

**20 வயது பிரிவு**

*யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காற்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் 01:01 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிய சமநிலை தவிர்ப்பில் 5(7):4(7) என்ற கோல்கணக்கில் சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்று வலய சம்பியனானது.*

**18 வயது பிரிவு**

*யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியை 02:01. என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய சம்பியனானது.*

**16 வயது பிரிவு**

*யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சென் ஜோண்ஸ் கல்லூரியை 01:00. என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய சம்பியனானது.(05)*

# உகந்தமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவ கொடியேற்றம் சனிக்கிழமை ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க சுதா தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

உகந்தை மலை ஸ்ரீமுருகன் ஆலய கொடியேற்றம் கடந்த 06 ஆம் திகதி ஆலயபிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் கிரியையில் நடைபெற்றன.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக16 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 22ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள். அந்த நிலைமை இன்னமும் மாறவில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முதலில் சம்பந்தனின் மறைவுக்காக எமது ஆழ்ந்த இரங்கல்களை நாம் தெரிவித்துக்கொள்கின்றோம். சம்பந்தனுக்கும் எனக்கும் நிறைய உரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. சம்பந்தன் புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டில் தீர்வினை எட்டுவதற்காக முயற்சித்தார். நல்லாட்சி காலத்தில் அவர் அதனை முன்னெடுத்தார். அதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் வழிகாட்டல் குழுவில் பேச்சு நடத்தப்பட்டது.

நண்பர் சுமந்திரனும் என்னுடன் அமர்ந்திருந்து செயற்பட்டதோடு ரவூப்பும் ரிஷாத்தும் இருந்தார். அந்தக் குழுவில் சம்பந்தன், ''ஐக்கிய இலங்கைக்குள் பிளவுபடாத இலங்கைக்குள் பன்மைத்துவத்தை உறுதி செய்து சம உரிமையை அளியுங்கள்'' என்றுதான் கேட்டார்.

சர்ச்சைக்குரிய விடயமான வடக்கு, கிழக்கு இணைப்புக்கூட வழிகாட்டல் மற்றும் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அரசமைப்பில் காணப்படுகின்ற பௌத்த மதத்துக்கான முதன்மை இடம் சம்பந்தமாககூடப் பேசவில்லை.

அண்ணாமலை அவர்களே, பிரிவுபடாத இலங்கைக்குள் வாழவேண்டும் என்பதற்காகவே சம்பந்தன் உழைத்தார். இதனால் அவர் தமிழ் மக்கள் மத்தியிலும் விமர்சனத்துக்கு உள்ளாகினார்.

பிரபாகரன் ஆயுதத்தினால் பெறமுடியாத விடயத்தினை சம்பந்தன் பேச்சு ஊடாகப் பெறப் பார்க்கின்றார் என்று சிங்களத் தலைவர்கள் தவறாகப் பரப்புரை செய்தார்கள். பொய்யுரைத்தார்கள். அந்த நிலைமை இன்னமும் மாறவில்லை.

அந்த நிலைமை மாறும் வரையில் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இரண்டாவது மூன்றாவது பிரஜைகளாக வாழ விரும்பவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சம்பந்தனுக்கும் தனக்கும் இடையிலான உறவினைக் கூறினார். எதிர்வரும் காலத்தில் நிலைமைகள் மாற்றப்பட்டு பல்லினமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## புதிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட்டார். ஆனால் அந்த முயற்சியில் அவரால் வெற்றிபெற முடிந்திருக்கவில்லை.

சம்பந்தன் போரின் கோரங்களை உணர்ந்துகொண்டு அதன் பின்னரான காலத்தில் உள்ள நிலைமைகளையும் அவதானித்து நாட்டின் ஐக்கியத்துக்காக செயற்பட்ட ஒரு தலைவராக அவர் இருந்தார் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் பல ஐரோப்பிய நாடுகளிலும் செயற்படுத்தப்படுகிறது.

இன்று லண்டன் உட்பட பல ஐரோப்பிய நகரங்களில் இந்த முறைமை சரிவைக் கண்டுள்ளது. அதனால்தான் எல்லா இடங்களிலும் திருட்டு நடக்கிறது. போதைப்பொருள் கடத்தலும் நடக்கிறது. இவ்வாறு சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதும் ரிஷி சுனக் அரசின் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதே அரசின் முதல் கடமையாகும் என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். 2021--2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வீடுகள் அழிக்கப்பட்டன, வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டன. இவ்வாறு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தபோது, அதனை சீரமைக்க வேண்டியிருந்தது.

நாட்டில் நடந்த அழிவுச் செயல்களுக்குப் பின்னால் போதைப்பொருள் வியாபாரிகளும் இருந்தனர். எனவே, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்போது போதைப் பொருளையும் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. போதைப்பொருள் தடுப்புக்காகவே இந்த சமூக பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இது வெற்றி பெறுமா இல்லையா என்ற கேள்வி எழுந்தது. ஆனால் இன்று இது ஒரு வெற்றிகரமான திட்டமாக மாறியுள்ளது.

இன்று பல பகுதிகளில் போதைப் பொருள் காரணமாக திருட்டு நடக்கிறது. போதைப்பொருள் வாங்க சிலர் திருடுகிறார்கள். இந்நிலை தொடர அனுமதிக்க முடியாது. இன்று ஆப்கானிஸ்தானில் இருந்து போதைப்பொருள் நம் நாட்டிற்கு வருகிறது.

இந்த போதைப்பொருள் பாகிஸ்தான், இந்தியா என அனைத்து நாடுகளுக்கும் வருகின்றது. இந்த போதைப்பொருள் கடத்தல் கடல் வழியாக நடைபெறுகிறது. எனவே, இந்த நடவடிக்கைகளுக்கு நாம் இப்போது கடற்படையை அனுப்ப வேண்டியுள்ளது. பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் இணைந்து தீர்வு காண இப்போது முடிவு செய்துள்ளன.

அதேசமயம் கிராமங்களிலும் இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். பொதுச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். இந்த போதைப்பொருள் வர்த்தகத்தால் எமது எதிர்கால சந்ததியினர் அழிந்து வருகின்றனர். எனவே, இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இதற்கு அனைவரும் பொலிஸாருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில், கிராமங்களின் விகாரைகள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கு சிறப்புக் கடமை உள்ளது. மேலும், பாடசாலைகளிலும் இது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். சில மாணவர்கள் போதைப்பொருட்களை பாடசாலைளுக்கு கொண்டு வருகின்றனர்.

எனவே, போதைப்பொருளுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி, நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க இந்தக் குழுக்கள் திறம்பட செயலாற்ற வேண்டும்.

இதன்போது விருப்பம் இன்றியேனும் சிலரைத் தடுத்து வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவை அல்ல. புதிய சட்டங்கள் தேவை. சிங்கப்பூரில் போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு தூக்குத் தண்டனை நடைமுறையில் உள்ளது. நாம் அந்தளவு தூரம் செல்ல விரும்பவில்லை. ஆனால் இவர்களைத் தடுப்புக் காவலில் வைக்க வேண்டியது அவசியம்.

இவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு மனித உரிமை பற்றிப் பேசும் சில சட்டத்தரணிகள் இவர்களுக்கு உதவ முன்வருகிறார்கள். அதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். போதைப்பொருள் கடத்தல் மனித உரிமை மீறல் என்று நம்புகிறேன்.

அவர்கள் போதைப்பொருள் விற்பனை மனித உரிமை மீறல் அல்ல என்கிறார்கள். ஆனால் போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்வது மனித உரிமை மீறல் என்கிறார்கள். எனவே இது தொடர்பில் நமது நிலைப்பாடு என்ன என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்று நாம் மீண்டு வருகிறோம். இப்போது படிப்படியாக பொருளாதாரத்தை சீரமைத்து வருகிறோம். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைகளையும் பெற்றுள்ளோம்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதேவேளையில், அரச நிதி முகாமைத்துவத்துக்கான பணிகளையும் முன்னெடுத்து வருகிறோம். அரச நிதிச் சட்டம், அரச கடன் சட்டம், மத்திய வங்கிச் சட்டம் ஆகியவையும் தயாரிக்கப்பட்டுள்ளன. நாம் இப்போது வரவு செலவுகளையும் முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மேலும், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வும் வழங்கப்பட்டது.

நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எனவே, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல், மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணிகளை ஒரே நேர்கோட்டில் செய்து வருகிறோம். இப்போது சிலர் சம்பள உயர்வு வேண்டும் என்கிறார்கள். இது கடினமானதாகும்.

ஆசிரியர்களுக்கு 2022 இல் சம்பள உயர்வை வழங்கியுள்ளோம். மேலும் 2024 இல் பத்தாயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது. எனவே அந்தக் கோரிக்கைகள் நியாயமற்றவை. அவர்கள் இரண்டு சலுகைகளைப் பெற்றாலும், மற்றவர்களுக்கு ஒரு சலுகை மட்டுமே கிடைத்தது.

அத்துடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முகாமைத்து உதவியாளர்களும் சம்பள உயர்வு கோருகின்றனர். இந்த சம்பள உயர்வை வழங்கினாலும் கொடுக்க ஆளும் தரப்பிடம் பணம் இல்லை. அதனால் வரியை அதிகரிக்க வேண்டும். இப்போது 18% வற் (ரபுவீ) வரி வசூலிக்கப்படுகிறது. சம்பள உயர்வு வழங்க, மீண்டும் வற் வரியை அதிகரிக்கவேண்டும். மக்களால் அதைத் தாங்க முடியாது.

10 இலட்சம் அரச ஊழியர்களே நாட்டில் இருக்கவேண்டும். இப்போது 15 இலட்சம் பேர் உள்ளனர். சிலர் 5 இலட்சம் பேரை சம்பளமில்லாத விடுமுறையில் அனுப்பச் சொன்னார்கள். கொடுப்பனவுகளை பின்பு செலுத்தலாம் என்றும் கூறினர். அப்போது எவரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று நான் கூறினேன். வற் வரியை உயர்த்தி, அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியிருந்த நிலையில், இந்த ஆண்டு மீண்டும் அவர்களுக்கு சம்பள உயர்வை வழங்க முடியாது. 10 இலட்சம் பேருக்கு சம்பள உயர்வு வழங்கவே வற் வரியை 18 சதவீதமாக உயர்த்த வேண்டியுள்ளது.

அவ்வாறு சம்பள உயர்வு வழங்கினால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள். இம்மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து தேர்தலுக்குத் தயாராக வேண்டும். ஆனால் அடுத்த வருடம் முதல் சம்பள திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதற்குத் தேவையான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும்போது சிலர் நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். இந்த சம்பள உயர்வுகளை வழங்கினால் எமக்கு கிடைக்கவிருக்கும் 8 பில்லியன் டொலர்களை இழக்க நேரிடும். நாட்டின் தற்போதைய பொருளாதாரத்தின்படி எந்தக் கட்சியாலும் இதைச் செய்ய முடியாது.

நாம் முன்னேறும்போது, நமது பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்ற வேண்டும். அதற்காக பொருளாதார மாற்றச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டில் விவசாய நவீனமயமாக்கலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஊவா மாகாணத்தை பெரும் விவசாய ஏற்றுமதிப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. மேலும், பதுளை மாவட்டத்தில் சுற்றுலா, விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையை அபிவிருத்தி செய்ய முடியும்.

நமது நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது நமது எதிர்கால சந்ததியினர் போதைப்பொருளால் அழிந்தால், நமது உழைப்பு வீணாகிவிடும். இளைஞர்களை பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும் - என்றார்.

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்தார்.

திருகோணமலைக் காடுகளில் நாங்கள் வாழ்ந்த தருணத்தில் அவர் எம்மை மீட்பதற்காகவும் எம்முடன் இணைந்தும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

சம்பந்தன் பற்றி விமர்சனங்கள் இருப்பதையிட்டு கவலைகொள்ளவில்லை. ஆனால் சம்பந்தன் தமிழ் மக்களின் விடுதலை, அவர்களின் தேசத்தின் விடுதலை, சொந்த மண்ணில் அவர்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தல் என்ற நோக்கங்களுக்காக பயணித்தவர்.

அதுமட்டுமன்றி, தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டும். அதன் மூலம் நிம்மதியாக வாழவேண்டும் என்ற இலட்சியத்தோடு வாழ்ந்தவர். அதற்காக அர்ப்பணிப்புடன் பயணித்தவர் என்பது உறுதியான விடயமாகும்.

உலக நாடுகள் பலவும் விடுதலை பெற்றபோது தமிழ் மக்களும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இழந்த சுதந்திரத்தை மீட்டெடுக்கவேண்டும் என்பதற்காகச் செயற்பட்டார்.

தமிழ் மக்களின் தந்தையான செல்வா போன்று சம்பந்தனும் தமிழ் மக்களினால் பெருந்தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவராக இருக்கின்றார். அதேபோன்று அவர் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த விடயமான உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு தமிழ் மக்கள் உரித்துடையவர்கள் என்பதை இங்குள்ள தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதி சம்பந்தன் பற்றி கூறும்போது சுதந்திர தினத்துக்கு சென்று பார்த்த நான் நாட்டை பிளவுபடுத்துவேனா என்று கேள்வி எழுப்பியதாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே, தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்டை புரிந்து நியாயமான தீர்வினை வழங்குவதற்கு முன்வரவேண்டும் என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தத்தின் கட்டமைப்பிற்குள் அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு ஆளும் தரப்பு புதிய பரிந்துரையை முன்மொழிந்துள்ளது. என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் சம்பந்தனது இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற அவரது இறுதி கிரியையில் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றியபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த ஆர். இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியைகள், நேற்றுப் பிற்பகல் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் உட்பட பெருந்திரளானவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இறுதி நிகழ்வில் இரங்கலுரை ஆற்றிய ஜனாதிபதி, சம்பந்தனின் மறைவு நீண்டகால நண்பரின் இழப்பு எனக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1977 ஆம் ஆண்டு நானும் சம்பந் தனும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாடாளுமன்றத்திற்கு வந்தோம். அந்தத் தேர்தலில் திருகோணமலையில் எமது கட்சியின் செயற்குழு உறுப்பினர் நவரத்தினம் ராஜாவை நான் ஆதரித்தேன். ஆனால் அந்த போட்டியில் ஆர்.சம்பந்தன் வெற்றி பெற்றார்.

குறிப்பாக தனிநாடு உருவாக்கப்படவேண்டும் என்ற பிரேரணையின்படி நாடாளுமன்றம் இரு தரப்பாகப் பிரிந்தது. ஆர். சம்பந்தன் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் சிறப்பான உறவைக் கொண்டிருந்தார்.

இந்த நாட்டைப் பிரிக்க முடியாது என்பதால், சமஷ்டி ஆட்சி முறையில் அல்லது மாவட்ட சபை முறையைவிட அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வந்தோம்.

எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. திருகோணமலையில் ஒரு காணியை நான் இளைஞர் சேவை மன்றத்திற்கு வழங்கியபோது நாடாளுமன்றத்தில் கூட எமக்கிடையில் விவாதங்கள் இடம்பெற்றன. இதைக் கட்டுப்படுத்த அவர் எடுத்த முயற்சியும், நாங்கள் எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.

அவர் 1983 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். மறுபடியும் அவர் நாடாளுமன்றத்துக்கு வந்த பிறகு, நாங்கள் மீண்டும் தொடர்புகளைப் பேணினோம். 2009 இல் போர் முடிவுக்கு வந்த பிறகு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் அவருடன் இணைந்து செயல்படும் வாய்ப்புக் கிடைத்தது.

அவர் ஒருபோதும் தனி நாடு கோரவில்லை. அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்று எப்போதும் கூறினார். தமிழ் மக்கள் துன்பப்படுகிறார்கள் எனவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாங்கள் தேர்தலில் இணைந்து பணியாற்றியுள்ளதுடன், பொது வேட்பாளர்களை ஆதரித்துள்ளோம். குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவுக்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். அதற்கு முன் சரத் பொன்சேகாவுக்காகச் செயற்பட்டோம்.

அதன் பிறகு அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதன்போது தனது சிறப்பான குணத்தை எடுத்துக் காட்டினார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியதோடு, அதற்காகப் பாடுபட்டார். அது மாத்திரமன்றி அனைத்து இலங்கையர்களின் பிரச்சினைகளையும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் முன்வைத்தார். அப்போது அவர் உண்மையான எதிர்க்கட்சித் தலைவராக செயல்பட்டார். உண்மையான எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் மாற்றுப் பிரதமர் ஆவார்.

2018 ஆம் ஆண்டு ஆளும் தரப்பில் நெருக்கடி ஏற்பட்ட நேரம், நான் பிரதமர் பதவியை இழந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக அவர் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். வேறு காரணங்களால், எங்களது கலந்துரையாடல் வெற்றியடையவில்லை, குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பின்னர், அரசியல் தீர்வுகளை முன்வைப்பதற்கான பின்னணி எம்மிடம் இருக்கவில்லை.

நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், இந்த விடயங்களை அவருடன் கலந்துரையாடினேன். மேலும் தமிழ் கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. மிக முக்கியமான சில கருத்துகள் அங்கு பேசப்பட்டன. பிரிக்கப்படாத இலங்கையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம். இப்பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கும் வேளையில், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நான் முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. இதனால், கடந்த சில மாதங்களாக எங்களது கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த கலந்துரையாடல்களை இந்த நாடாளுமன்ற வாரத்தில் மீண்டும் தொடங்க முடியுமா என்று நான் விசாரித்தேன். ஆனால் அந்த வாய்ப்பிற்கு முன்னரே சம்பந்தன் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். ஆனால் இந்த கலந்துரையாடல்களை நாம் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு சென்று நிறைவு செய்ய வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராகியுள்ளது.

சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம்கள் தமது கிராமங்களை சுவீகரிப்பது தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்தப் பிரச்சினைகளை சட்டத்தின் மூலம் தீர்க்க இந்த ஆணைக் குழுவுக்கு அதிகாரம் அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவது என கலந்துரையாடி தீர்மானித்துள்ளோம். யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும் இந்த வருடமே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

புதிய முறைமையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலேயே நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்காக எங்களுக்குள் உடன்பாடு ஏற்பட்டிருந்தது. பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை வழங்குவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கத்துவத்தை வைத்துக்கொண்டு இதற்காகப் போட்டியிட அனுமதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள இப்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றிப் பின்னர் கலந்துரையாடலாம்.

புதிய பரிந்துரையாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் கட்டமைப்பிற்குள் அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு ஆளும் தரப்பு முன்மொழிந்துள்ளது. மேலும், நவாஸ் ஆணைக்குழு அறிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது. ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கத் தயார் நிலையில் உள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சர் என்னிடம் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், மக்கள் சபை முறை குறித்தும் இப்போது கலந்துரையாடி உடன்பாடு எட்டியுள்ளோம். இந்தக் கலந்துரையாடல்களை முன்னோக்கிகொண்டு சென்று நிறைவு செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம்.

சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட தலைவர். சம்பந்தன் இலங்கை மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த தலைவர். நாம் இருவரும், பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். அதற்காக நாங்கள் இருவரும் உடன்பாட்டுடன் கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டுசென்றதுடன் இப்பணியை நிறைவுசெய்ய அனைவரும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் -என்றார்.

# 10 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளை திருடிய குற்றச்சாட்டில் கான்ஸ்டபிள் கைது

கொஸ்கம பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து 10 லட்சம் ரூபாபெறுமதியானசொத்துக்களைத் திருடிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பொருட்களிலிருந்த கைரேகைகள் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுடைய கைரேகையுடன் ஒத்துப் போனமையால் இவர் கைது செய்யப்பட்டதாக கொஸ்கம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் அவிசாவளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது .

கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த கைரேகைகளைக் கைரேகை துறைக்கு விசாரணைக்காக அனுப்பியதையடுத்து சந்தேகத்தின் பேரில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட பொருள்களை வைத்திருந்த சந்தேகநபர் கைது

தம்புள்ளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட பொருள்களை வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இவரிடமிருந்து கைத்துப்பாக்கி, 12 வகையான ரவைகள், கத்திகள், 13 கஞ்சா செடிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர் 45 வயதுடையவர் என்பதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மொழிபெயர்ப்பாளராக சத்தியபிரமானம்



தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும் நடராசா சுதர்சன் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ் சதீஸ்தரன் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சசத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

மொழிபெயர்ப்பாளர் பதவிகளுக்கு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சையில் தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பாளர் பரீட்சை எழுதி சித்தியடைந்தே இவர் இந்த சத்தியப்பிரமானத்தை யாழ்.மாவட்ட நீதிவான் முன்னிலையில் பெற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை ஏற்றுக்கொண்டார்.(05)

## சம்பந்தனின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இனமொன்றின்விடுதலைக்கான இயக்கத்தில் 91 ஆண்டுகள் பணியாற்றிய தலைவர் ஒருவர் மறைந்த துக்கமான தருணத்தில் இணைந்திருக்கின்றோம். அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் இலக்கணமாக இருந்ததோடு அரசியல் கொள்கையில் நெஞ்சுரத்துடன் நேர்மையாக இருந்துள்ளார்.

அவரொரு சட்டத்தரணியாக இருந்தபோதிலும் 1956இல் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்து கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்தார். சம்பந்தன் தான் எடுத்த பணியை இயன்ற அளவில் முன்னெடுத்து இங்கிருக்கின்ற அனைத்து தலைவர்களும் அடுத்தகட்டபிரிதிநிதிகளுக்கும்தனது பணியைத்தொடர்ந்துமுன்னெடுத்து நிறைவுக்குகொண்டுவரவேண்டும் என்று விட்டுச் சென்றுள்ளார்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி கொழும்பில் சம்பந்தனை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக சந்தித்தபோது எடுத்த புகைப்படத்தினை அவர் மீண்டும் பகிர்ந்து நினைவுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

விசேடமாக தமிழர்களுக்கு நேர்மையானதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை நினைவுகூர்ந்துள்ள பிரதமர் மோடி உணர்வுடன் வெளிப்படுத்தியுள்ளார். நான் இங்கு நின்றுகொண்டிருப்பதற்கான காரணம், தமிழக மக்களும் பாரதிய ஜனதா கட்சியும் எந்தளவு தூரம் அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றோம் என்பதன் வெளிப்பாடாகும்.

அதேநேரம், சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காக வாழ்ந்து மறைந்திருக்கின்றார். அந்தநோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்தநோக்கம்நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள். அத்துடன் சம்பந்தன் விட்டுச்சென்ற பணியை முன்னெடுப்பதற்காக அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும் என்று நான் கேட்டுகொள்கின்றேன் என்றார்.

## போதை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலஸ் தெரிவித்தார்.

'சட்டத்தை மதிக்கும் நாடு' எனும் தொனிப்பொருளில் வெல்லவாய பொது விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஊவா மாகாண சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களின் வலுவூட்டல் செயலமர்வில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களை பின்னோக்கிப் பார்த்தால், நாட்டின் நிலைமை எல்லோருக்கும் தெரியும். மக்கள் வரிசையில் நின்று அவதிப்பட்டனர். நாடு தீப்பற்றி எரிந்தது. நாட்டில் தலைவர்களைத் தேடிப்பிடிப்பது கடினமாக இருந்தது. அப்போதுரணில்விக்ரமசிங்கநாட்டு மக்களுக்காக பிரதமர் பதவியை துணிச்சலாக ஏற்றுக்கொண்டார். சில மாதங்களுக்குப் பிறகு, அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

அன்றிலிருந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி கடுமையாக உழைத்தார். நாட்டில் வரிசை யுகம் முடிவுக்கு வந்தது. சமுர்த்திக்கு பதிலாக, அஸ்வெசும நிவாரணத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு அதிக நிவாரணம் வழங்கப்பட்டது. எவ்வளவோ பொருளாதாரச்சிக்கல்கள் இருந்தபோதிலும், மாணவர்களுக்கான உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை போன்ற நிவாணைங்கள் வழங்கப்பட்டன.

இரண்டே ஆண்டுகளில் நாட்டை வழமை நிலையான நிலைக்குக் கொண்டு வர முடிந்தது. இந்த நடவடிக்கைகளுக்காக நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டியது அவசியமாகும். பாதாள கோஷ்டிகளும் போதைப்பொருளும் நாட்டை சீரழித்து வருகின்றன. அதைக் கட்டுப்படுத்தவே இந்தத் திட்டத்தைத் ஆரம்பித்துள்ளோம்.

'யுக்திய' திட்டம் இந்நாட்டு மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இந்தவருடம் ஜூன் 31ஆம் திகதிக்குள் இந்த நாட்டில் பாதாள கோஷ்டிகள் மற்றும் போதைப்பொருள் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படும் என நான் அறிவித்தேன். பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே 'யுக்திய' திட்டம் செயல்படுத்தப்பட்டது.

என்ன அழுத்தம் வந்தாலும் இந்த முன்னெடுப்பு நிறுத்தப்படாது. ஜனாதிபதியின் தலைமையில் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்திற் குள் இந்த நாட்டிலிருந்து பாதாள கோஷ்டிகளையும் போதைப்பொருளையும் இல்லாதொழிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்துள்ளார் என்றார்.

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்மக்களின்தானைத்தளபதி சம்பந்தன் மூத்த அண்ணனாக, வழிகாட்டியாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் தமிழ்த்தேசியப்பரப்பின் ஆலமரமாக, இன விடுதலைக்காக சிம்ம சொப்பணமாக ஒலித்த குரல். நித்தியமாக ஓய்ந்துள்ளது.

அவரது அரசியல் வாழ்க்கையின் சாதனைகளைப் பற்றி நீண்ட நெடிய உரையாற்றுகின்ற நேரம் இதுவல்ல. தமிழின் விடுலைக்காக ஓங்கி ஒலித்த குரல் ஓய்ந்துவிட்டாலும், நில அபகரிப்புக்களுக்கு எதிராக கர்ஜித்த குரல் நிரந்தரமாக மௌனித்துவிட்டாலும் அந்த அண்ணாருக்கு செலுத்துகின்ற அஞ்சலி எதுவாக இருக்கும் என்பதை நாம் அனைவரும் சிந்திப்பதுதான் தலையாய கடமையாகவுள்ளது என்று கருதுகின்றேன்.

குறிப்பாக தமிழ் பேசும் தரப்பினருக்குள் காணப்படுகின்ற ஒற்றுமையை குலைத்துவிடாது பாதுகாப்பதுதான் அன்னாருக்கு செலுத்துகின்ற பெரும் அஞ்சலியாக இருக்கும் என்பதுதான் எனது தாழ்மையான கருத்தாகும்.

முஸ்லிம்கள் அண்ணன் சம்பந்தன் மீது கொண்டிருக்கின்ற வாஞ்சை என்பது அளவிடமுடியாதது. முஸ்லிம்களையும் அரவணைத்த ஒரு தீர்வு வடக்கு, கிழக்கில் வரவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அதற்கு எதிராக சலசலப்புக்கள் அவ்வப்போது எழுந்தபோது அதற்கு எதிராக தயங்காது சலனமில்லாது குரல் கொடுத்தார் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கௌரவம்

(எம். எப். றிபாஸ்)

நீர் வழுங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளராக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் பிரதம பொறியியலாளர் யூ.கே.எம் முஸாஜிக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு, பிராந்திய முகாமையாளர் காரியாலய உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ரீ.எப். சீ மண்டபத்தில் சிரேஷ்ட பொறியியலாளர் பி.மயூரதன் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

பொத்துவில் தொடக்கம் மத்தியமுகாம் வரையான அக்கரைப்பற்று பிராந்தியத்தில் உள்ள மூவின மக்களுக்கும் இலங்கையில் ஏற்பட்ட கொவிட்-19 அசாதாரண காலப்பகுதி மற்றும் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலையில் கூட பொதுமக்களுக்கு எவ்வித தடையும் இன்றி தொடர்ச்சியாக நீரையை வழுங்கியதோடு, சுத்தமான குடிநீரை இம்மக்கள் அருந்த வேண்டும் என்ற நோக்கில் பொதுமக்களின் தேவையறிந்து புதிய நீரிணைப்புக்களை இரவு பகலாக சக உத்தியோகத்தர்களுடன் இணைந்து வழுங்கி இவர் அவர்களின் பெரும் வரவேற்பை பெற்றவராவார்.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் டீ.ஏ.பிரகாஷ், புதிய பிராந்திய முகாமையாளர் ஐ.எல். ஹைதர் அலி, பொறியியலாளர்கள், வாணிப உத்தியோகத்தர், கணக்காளர், சமூகவியலாளர், பொறியியல் உதவியாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிராந்திய முகாமையாளரின் சேவையை பாராட்டி பிரதம அதிதியால் பொன்னாடை போர்த்தி, ஞாபக சின்னம் வழுங்கி இவர் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# 36 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறார் அம்சுதீன் ஆசிரியர்

(எச்.எம்.ஹலால்தீன்)

கல்விப் பணியை தமது உயிர் பணி எனக் கொண்டு மாணவர்கள் சமுதாயத்தில் உயர்வு பெற்று வாழ வேண்டும் என்பதற்காக தனது ஆசிரியர் சேவை காலம் முழுவதும் கல்வி பணிக்காகவே அர்ப்பணித்தவர் ஓய்வு பெறும் ஜனாப். ஏ.எல். அம்சுதீன் ஆசிரியர்.



கிண்ணியாவில் 1964.07.09 ஆம் திகதி அப்துல் லெத்தீப், உம்சலும்மா தம்பதியினருக்கு ஆறு சகோதரர்களில் மூத்த சகோதரனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை திஃகிண்ஃமுஜாகிதா வித்தியாலயத்திலும், இடை நிலைக் கல்வியையும், உயர் கல்வியையும் திஃகிண்ஃ கிண்ணியா மத்திய கல்லூரியிலும் பயின்றார்.

மற்றவர்களின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்து, சந்திக்கும் சவால்களை வென்று வழங்கப்படும் சேவை தான் உண்மையான ஆசிரியப் பணி. அதனால்தான் இறைவனிடத்தில் உயர் அறப்பணியாக கணிக்கப்படுகிறது.

தனது 23 ஆவது வயதில் தன்னை ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட இவர் 1988.05.19 ஆம் திகதி திஃகிண்ஃ தாருல் உலூம் மஹா வித்தியாலயத்தில்முதல்ஆசிரியர் நியமனம் பெற்றார்.

அட்டாளைச் சேனை ஆசிரிய பயிற்சி கலாசாலையில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்த பின் தான் விரும்பிய பாடமாக கணித பாடத்தைக் கற்பித்தார்.

கற்பித்த பாடசாலைகளிலெல்லாம் கணித பாடத்தில் சிறந்த பெறு பேறுகளை பெற்றன க.பொ.த. சாதரண பரீட்சைப் பெறுபேற்று வீதத்தை மிக உயர்ந்த வீதத்திற்கு கொண்டுவந்தார்.

2007, 2008 காலப்பகுதியில் திஃ கிண்ஃ இஹ்ஸானியா வித்தியாலயத்தில் க.பொ.த. (சாஃத) பரீட்சையில் அதி கூடிய உயர் சித்தி வீதமாக 80 வீதம் இவரால் அப்போதய சவால் நிறைந்த காலப்பகுதியில் பெற முடிந்தது தனதுசேவைக் காலத்தில் ஒன்பது பாடசாலைகளில் சேவை புரிந்துள்ளார்.

திஃகிண்ஃதாருல் உலும் ம.வி., திஃகிண்ஃ அல் ஹிக்மா ம. வி,ஃ திஃ கிண்ஃ அப்துல் மஜீது வித்யாலயம்.ஃ திஃ கிண்ஃ இஹ்ஸானியா வித்தியாலயம்., திஃ கிண்ஃ அல் அதான் ம. வி. திஃ கிண்ஃ குறிஞ்சாக்கேணி மகளிர் ம. வி,திஃகிண்ஃ அல் இர்பான் ம. வி. ஆகிய பாடசாலைகளில் கல்விப் பணிப்பாளர்களின் கணித பாடத்தை மேம்படுத்துவதற்கான விஷேட செயற்திட்ங்களை வெற்றிகரமாக செயற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்.

அந்த வகையில் இவரின் விரும்பிய பாடம் கணிதம். தனது 36 வருட சேவைக்காலத்திலும் கற்பிக்க கிடைத்த வாய்ப்பினாலும், இவரின் சேவை தேவையாக இருந்ததாலும் சேவைக்காலத்தை ஆர்வத்துடன் மகிழ்சியாகவும், சந்தோசமாகவும் நிறைவு செய்ய முடிந்தது.

இவரது சேவைக்காலத்தில் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடவில்லை கற்பிக்கும் பாட சாலையில் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் உளவள ஆலோசனைகளை, உபதேசங்களை வழுங்கி அவர்களை விழிப்படையச் செய்வது இவரின் சிறப்பு பண்பாகும்.

இறுதியாக சேவை புரிந்த பாடசாலை திஃகிண்ஃஅல் இர்பான் ம. வித்யாலயம் அங்கு வேறு கணித பாட ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இவரின் இறுதி சேவைக்காலம்வரை இம்முறை பொதுப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவை செய்துள்ளார்.

ஓய்வுக்குப்பின் தனது சேவை காலத்தை,மக்களின், மாணவர்களின் விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என ஓய்வுகாலும் சிறப்பாக அமைய வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றோம். (05)

# சீன அரசின் பொருத்து வீடுகள் கிளிநொச்சியை வந்தடைந்தன





வடக்கு கிழக்கு மாகாணங்களில் சீன அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள பொருத்து வீட்டுத்திட்டத்தின் வீடுகள் அமைப்பதற்காக எட்டு பாரஊர்திகளில் பொருத்து வீடுகள் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டன.

குறித்த பொருத்து வீடுகளைக்கொண்ட பாரஊர்தியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 64வீடுகள் இவ்வாறு வழுங்கப்படவுள்ளன. (05 - 113)

# வரவேற்பு நிகழ்வு

(எம்.எஸ்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் இயங்கும் பாரம்பரிய பொல்லடிக் கலைமன்றமான மருதூர் கலைமன்றத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள புதிய கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். தௌபீக் அவர்களை வரவேற்று, பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருதில் அருகிவரும் பொல்லடி எனும் களிகம்புக் கலையை சிறியோருக்கு பயிற்றுவித்தும் மற்றும் பழைமையான சிறந்த கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் சாய்ந்தமருது மருதூர் கலைமன்றத்தின் ஆயுட் காலத் தலைவர் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள புதிய கலாசார உத்தியோகத்தர் ஏ. எம். தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது மருதூர் கலைமன்றத்தின் உறுப்பினர்கள் பொல்லடி அடித்தும், மன்றத்தின் ஆயுட்காலத் தலைவர் ஏ.இஸ்ஸதீன், பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர், பொருளாளர் ஐ.எல்.ஏ. முபாரக், உப தலைவர் எம்.எம். மன்சூர் ஆகியோர் மாலை அணிவித்தும் கலாசார உத்தியோகத்தருக்கு மகத்தான வரவேற்பு அளித்ததுடன் அவர் தற்காலிகமாக இருந்து செய்த சேவையைப் பாராட்டியதுடன், ஏ.எம் தௌபீக் சாய்ந்தமருதுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டது. சாய்ந்தமருதுக்கும், எமது பிரதேச கலைஞர்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதம் என்றும், இதன் காரணமாக கலைஞர்கள் மேலும் மேலும் பல நன்மைகளை அடைவார்கள் என்றும் இவர் இருக்கும் இந்தக் காலத்தை கலைஞர்கள் பிரயோசிதமுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் நிகழ்வில் பேசிய தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் உப தலைவர் ஆகியோர் கேட்டுக் கொண்டதோடு, வாழ்த்து மழை பொழிந்து அவருக்கான கௌரவத்தை மருதூர் கலைமன்றத்தின் பெரிய கலைஞர்கள், சிறிய கலைஞர்கள் வழுங்கி, பிரதம அதிதியை மகிழ்ச்சிப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

(05)

## சீரற்ற காலநிலையால்

# பாதிக்கப்பட்டோருக்கு காரைதீவில் நிதியுதவி

சீரற்ற காலநிலையால் இவ்வருட ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அம்பாறை மாவட்ட காரைதீவு-01,06,07 மற்றும் 11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பத்தொன்பது வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பாதிக்கப்பட்டிருந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கான முற்பண தொகை 10,000 ரூபா வழுங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சசிந்திரன் தலைமையில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்திய நாமல்







மறைந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன.

அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ள பூதவுடலுக்கு அரசியல்வாதிகள், பிரமுகர்கள் மற்றும் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், திருகோணமலையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சம்பந்தனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார .(05)

# மறைந்த தலைவர் சம்பந்தருக்கு அம்பாறையில் இருந்து அஞ்சலி



(வி.ரி. சகாதேவராஜா)

மறைந்த தமிழ்த் தலைவர் இரா. சம்பந்தத்தருக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது .

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திருகோணமலை சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் காரைதீவுபிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உறுப்பினர் திருமதி எஸ்.ஜெயராணி மற்றும் திருமதி கீதா ஜெயசிறில் ஆகியோரும் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.(05)

# பொத்துவிலில் சம்பந்தனுக்கு இரங்கல் அஞ்சலி நிகழ்வு

## உலருணவும் விநியோகம்





(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவிலில் மறைந்த தமிழ்த் தலைவர் இரா.சம்பந்தனுக்கு இரங்கல் அஞ்சலி நிகழ்வும் உலருணவு விநியோகமும் நேற்று

முன்னாள் பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளர் பெருமாள் பார்த்திபன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக தமிழ் தேசியத்தின் கொள்கைக்காய் குரல் கொடுத்தவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வானது இடம் பெற்றது.

அதன்போது மக்கள் பெருமளவில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்நாளில் சுமார் 75 பின்தங்கிய குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி சகிதம் உலருணவுப்பொதியை பார்த்தீபன் வழங்கினார்.

திருமலையில் நடைபெறும் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள ஆதரவாளர்களை அழைத்து செல்லும் தனது சொந்த நிதியை இப்பணிக்காக முன்னாள் தவிசாளர் பெருமாள் பார்த்தீபன் பயன்படுத்தினார்.

இ.த.அ.கட்சி பிரதேச தலைவரும் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளருமான பார்த்தீபனின் இம் முன்மாதிரியான முயற்சியை மக்கள் பாராட்டினார்கள்.

இந்நிகழ்வில் குண்டுமடு ஆலையடிப் பிள்ளையார் ஆலய தலைவர் எஸ்.கந்தசாமி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர்.

பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் சம்பந்தன் ஐயாவின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

ஏற்பாட்டாளர் பார்த்தீபன் தனது இரங்கல் உரையில் -

தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய பெருந்தலைவரை அனைவரும் இழந்து நிற்கின்றோம் அதுமட்டுமன்றி அரசியலுக்கு உள்நுழைந்த காலமுதல் தனது 91வயது வரை அஹிம்சை வழியில் போராடி இராஜதந்திர நுட்பங்களை கையாண்ட தலைவர் சம்பந்தன் ஐயா என்றும் ஐயாவின் வெற்றிடத்தை இனி எவராலும் ஈடு செய்ய முடியாது என்ற கருத்தையும் தெரிவித்தார். (05)

# மாணிக்கங்கையில் நீராடியபோது முதலை கடித்து ஒருவர் உயிரிழப்பு

## பெரஹராவில் யானை குழப்பம்

( கதிர்காமத்திலிருந்து வி.ரி. சகாதேவராஜா)

கதிர்காமம் மாணிக்கங்கையில் நீராடிய ஒருவர் முதலை கடித்து சம்பவ இடத்திலேயே பலியாகினர் .

இச்சம்பவம் கதிர்காமமக் கந்தன் கொடியேற்ற தினமான சனிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

சனி மாலை 5.30 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்று முதலாவது பெரஹறா பெரிய ஊர்வலத்திற்காக மக்கள் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் பலர் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அங்கிருந்த முதலை நீராடிய ஒருவரை கடித்து குதறி இருக்கின்றது .

சற்று வேளையில் அங்கு வந்த பொலீஸாரின் மீப்பு அணியினர்உடன் பாய்ந்து அங்கே கம்பியால் குத்தி அதற்குரிய நடவடிக்கை எடுத்த பொழுது இவர் மேலே மிதக்க காணப்பட்டார். பின்பு அவரது சடலம் கதிர்காமம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவர் மட்டக்களப்பைச்சேர்ந்த நடுத்தர வயதுடையவர் என ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. பின்னால் அவரது மனைவி உறவினர்கள் அங்கு அழுதழுது சென்றார்கள் .

இதேவேளை, முதலாவது பெரஹறாவில் கலந்து கொண்ட இரண்டு யானைகள் குழப்பம் விளைவித்தன. முதல் நாளில் லட்சம் மக்கள் பெரஹறா பார்க்க வந்திருந்தனர். யானைகள் மதங் கொண்டு ஓடி குழப்பம் விளைவித்தன.

இதனால் மக்கள் பீதியோடு கலைந்து ஓடினர். பிள்ளைகள் ஓலமிட்டனர். பலர் முண்டியடித்துக்



கொண்டு வெளியேறினர்.

அதன்போது சிலருக்கு காயமும் ஏற்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் கதிர்காமம் செல்லும் அடியார்களின் மனதிலே ஒருவித அச்சத்தை உண்டு பண்ணும்.

லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடும் இப் புனித பூமியில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற அனுமதிக்கக் கூடாதென்று பலரும் கருத்து தெரிவித்தனர். எனவே கதிர்காம நிர்வாகம் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்கின்றனர் .

அந்த புனித பூமியிலே மக்களுக்கான பாதுகாப்பையும் அவர்கள் வழங்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுக் கொண்டார்கள். (05)

# பதில் நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான இக்பாலின் மறைவு புத்தளத்துக்குப் பேரிழப்பு!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் அனுதாபம்

'சமூகங்களின் இணக்கப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் முன்நின்று செயல்படக்கூடிய ஒரு சிறந்த மனிதரை புத்தளம் சமூகம் இழந்திருக்கின்றது' என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பதில் நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அல்ஹாஜ் எம்.எம்.இக்பால் அவர்களின் மறைவு தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

புத்தளம் நகரத்துக்கு பெருமை சேர்த்தவர்களில் மர்ஹூம் இக்பால் மிகவும் முக்கிய பங்கினை ஆற்றியுள்ளார். அதேபோன்று, கல்விச் செயற்பாடு முதல் சமூக சேவைகளிலும் முன்நின்று, சமூகத்தின் தேவையறிந்து நிதானமாகச் செயல்படக்கூடிய ஆற்றல் கொண்ட ஒருவராக மர்ஹூம் இக்பால் அவர்களை நான் பார்க்கின்றேன்.

எனது அரசியலில் ஆரம்பகாலத்தில், புத்தளத்தில் நான் கண்ட மிகவும் பெறுமதியான, எந்த சந்தர்ப்பத்திலும் நல்ல ஆலோசனைகளை எடுத்துக்கூறக்கூடிய, சிறந்த மனம்கொண்ட ஒருவராக மர்ஹூம் இக்பால் அவர்கள் இருந்திருக்கின்றார்.

புத்தளத்திற்கு ஒரு சிறந்த அரசியல் தலைமைத்துவம் வரவேண்டும் என்பதற்காகவும், அந்த அரசியல் தலைமைத்துவம் அனுபவரீதியான தீர்மானங்களை முன்னெடுக்கக்கூடிய பக்குவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதிலும் மிகவும் கண்ணும் கருத்துமாக, கருத்துக்களை பதிவிட்டு வந்த ஒருவராக இக்பால் அவர்கள் காணப்பட்டார்.

புத்தளத்தில் வாழும் பெரும்பான்மைச் சமூக மக்கள் மத்தியில், சிறந்த நாமத்தைப் பதித்துக்கொண்ட ஒருவராக, தன்னுடைய தொழிலிலும் அதுபோன்று, சமூக செயல்பாடுகளிலும் நிலைபெறச் செய்தவராக இருந்திருக்கின்றார்.

சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இக்பால் அவர்கள், இஸ்லாமிய மார்க்கக் கல்வி மற்றும் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்காக தமது நேரத்தை ஒதுக்கி, அதற்காக உயர்ந்த பங்களிப்பினை ஆற்றியதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைவுகூறுவது பொருத்தமாகும்.

புத்தளம் மண் கண்ட பொக்கிஷங்களில் ஒருவராக மர்ஹூம் இக்பால் அவர்கள் திகழ்ந்தமையானது, புத்தளம் முஸ்லிம் சமூகத்திற்கும் அதுபோன்று, மக்களுக்கும் கிடைத்த அன்பளிப்பாகும்.

அன்னாரின் மறைவு புத்தளம் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். அன்னாரது இழப்பால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும், அவர் மீது அன்புகொண்டு செயல்பட்ட புத்தளம் சமூகத்துக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் மறுமை வாழ்வுக்காக எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன். - என்று குறிப்பிட்டுள்ளார்.

(05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!